**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 25.11.2025

அசல் வழக்கு எண். 98/2008

வா.சா. 1– சங்கர் த/பெ. கிருஷ்டப்ப நாயக்கர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நாராயணசாமி நாயக்கர் உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய பாட்டனார் ஆவார் கிருஷ்டப்ப நாய்க்கர் அப்பா ஆவார். நாராயண நாயக்கரை நீங்கள் பார்த்தீர்களா என்றால் எனக்கு சுமார் 6 அல்லது 7 வயது இருக்கும் பார்த்துள்ளேன். அவர் எந்த கிராமத்தில் வசித்து வந்தார் என்றால் தொள்ளாழி கிராமத்தில் வசித்து வந்தார். நீங்கள் நாராயண நாயக்கர் என்பவருடன் வசித்தீர்களா என்றால் என்னுடைய அப்பா இறந்து விட்டதால் நான் என்னுடைய அம்மாவின் தாத்தா வீட்டிற்கு சென்றுவிட்டேன் அடிக்கடி சென்று பார்த்து விட்டு வருவேன். நாராயண நாயக்கர் அவர்களுக்கு எத்தனை மனைவி என்றால் இரண்டு மனைவி அவர்கள் பெயர் தெரியுமா என்றால் பச்சையம்மாள், ஜெயலட்சுமி ஆகிய இரண்டு மனைவிகள் இருந்தார்கள். பச்சையம்மாள் வாயிலாக அவருக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தார்கள் என்றால் முறையே கிருஷ்ணன், வேலாயுதம், ஏழுமலை, கோவிந்தன் ஆகியோர்கள் பிறந்தார்கள். ஜெயலட்சுமி அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தார்கள் என்றால் தசரதன், சரவணன், வசந்தா, சிலோமணி, லட்சுமி ஆகிய பிள்ளைகள் பிறந்தார்கள். முதல் மனைவிக்கு பெண் குழந்தை பிறந்தார்களா என்றால் ஆண்டாள், லட்சுமி என்கிற இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தார்கள். உங்கள் தகப்பனார் கிருஷ்டப்ப நாயக்கருக்கு எத்தனை மனைவிகள்

என்றால் இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் வரதம்மாள், இரண்டாவது மனைவி பெயர் பாப்பாத்தி அம்மாள் ஆவார்கள் முதல் மனைவி வரதம்மாள் என்பவருக்கு பொன்னுரங்கம், சீனிவாசன் ஆகியோர் பிறந்தார்கள் இரண்டாவது மனைவி பாப்பாத்தி அம்மாள் என்பவருக்கு கஸ்தூரி மற்றும் சங்கர் ஆகிய நான் இரண்டு பிள்ளைகள் பிறந்தோம். பொன்னுரங்கம் மற்றும் சீனிவாசன் என்பவர்களுடன் நீங்கள் சமூக உறவு முறையில் இருக்கிறீர்களா என்றால் சமூகமாக தான் இருக்கிறேன். அவர்கள் இருவரும் நன்கு படித்தவர்கள் என்றால் சரிதான். பொன்னுரங்கம் என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருக்கிறார். பொன்னுரங்கம் என்பவருக்கு தற்பொழுது என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 60 வயது இருக்கும். மேற்படி இருவரும் அவர்களது தாத்தா நாராயணசாமி நாயக்கர் அவர்களுடன் வசித்து வந்தார்களா என்றால் இல்லை அப்பா இறந்த பிறகு அவர்களுடைய அம்மாவின் தாய் வீட்டிற்கு சென்று விட்டார்கள். அடிக்கடி வந்து பார்த்துவிட்டு செல்வார்கள். தாத்தா நாராயணசாமி நாயக்கர் தான் படிக்க வைத்தார் என்றால் சரிதான். தோள்ளாழி கிராமத்தில் என்ன நடக்கிறது என்ன பயிர் செய்கிறார்கள் என்று பொன்னுரங்கம் மற்றும் சீனிவாசனுக்கு தெரியும் என்றால் சரிதான் அவர்களுக்கு சொத்து விவரங்கள் தெரியும் என்று சொன்னால் சரிதான். தோள்ளாழி கிராமத்தில் நீங்கள் எப்பொழுது வந்தீர்கள் என்றால் திருமணம் நடைபெற்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தவுடன் வந்து விட்டேன். உங்கள் திருமணம் தோள்ளாழி கிராமத்தில் நடைபெற்றது என்றால் சரியில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. இறந்து போன வேலாயுதம் உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் சித்தப்பா ஆவார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வேலாயுதம், பொன்னுரங்கம், சீனிவாசன்

**ஆகியோருடன் உங்களுக்கு பிரச்சனை எதுவும் இல்லை என்று சொன்னால் நம்பிக்கை துரோகம் செய்தார்கள்.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram